# R 5435

# தெய்வீகப் புதிர்கள்

## DIVINE PARADOXES

"திறவுகோல் வசனம் : சங்கீதம் 63:3 "ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்"

இந்த திறவுகோல்வசனம் இரு வழிகளில் கண்ணோக்கப்படலாம். இவை இரண்டுமே மிக பொருத்தமானவையாயுள்ளது.முதல் வழியானது, சங்கீதக்காரனுடைய கண்ணோட்டம் மற்றும் அதன் அர்த்தத்தின்படி மட்டும் ஆராய்ந்து பார்ப்பது. மற்றொன்று, தீர்க்கதரிசனத்தின் நிலைப்பாட்டிலிருந்து கவனித்துப் பார்த்தல். தேவனுடைய தயவு, ஜீவனைப் பார்க்கிலும் அதிகம் விரும்பத்தக்கது என்று தாவீது தீர்க்கதரிசி பொருள்படுத்துகிறார் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.அதாவது, தெய்வீக தயவில்லாமல் ஜீவிப்பதைக் காட்டிலும் மரித்துவிடலாம் என்பதாகும். இதை மற்றொருவழியில் தீர்க்கதரிசன கோணத்தில் பார்க்கும்போது, இங்கும் மற்ற இடங்களிலும் தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவுக்கு அடையாளமாக சங்கீதக்காரன் இருக்கிறார். இயேசு தலை, அவரது அங்கங்கள் சபை.

நம் அர்ப்பணிப்பு உடன்படிக்கை மரணபரியந்தமானது. நமது சரீரங்களை பரிசுத்தமும் அவருக்குப் பிரியமுமான ஜீவபலிகளாக செலுத்தும்படிக்கு தேவன் நம்மை அழைத்திருக்கிறார். மேலும், வரவிருக்கிற ஜீவியத்திற்கான மகா மேன்மையும் அருமையும் விலையேறப்பெற்றதுமான வாக்குத்தத்தங்களை நமக்கு அளித்திருக்கிறார். ஆகவே அவர்மீதான அன்பினிமித்தமாகவும், நீதியின் கொள்கையை நேசிக்கவும் நமது ஜீவியங்களை கையளிக்க மனதாயிருந்தால் மட்டும் போதாது, மகிழ்ச்சியோடு ஒப்புக்கொடுக்கவேண்டும். தேவனுக்குப் பிரியமான காரியங்களை செய்வதற்கு நம் மனித ஜீவியங்களை சந்தோஷத்தோடு சமர்ப்பிக்கவேண்டும்.

தேவ தயவு என்பது நித்திய ஜீவன் என்ற கருத்தை தாவீதின் மற்றொரு சங்கீதம் நமக்குத் தருகிறது(சங்30:5). தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான் என்ற மற்றொரு தெய்வீகப் புதிருக்கு இசைவாக மேற்கண்ட புதிர்களாலான வாக்கியங்கள் உள்ளன. தன் பூமிக்குரிய ஜீவியத்தை சரணடையச் செய்பவன், மகிமை கனம் சாவாமையாகிய தெய்வீக சுபாவத்தை ஆதாயமாக்குவான். சபைக்கு நீட்டிக்கப்பட்ட தெய்வீக தயவை குறிப்பிடுகின்ற இந்த மகிமையான காரியங்களைக் குறித்து நாம் வியந்து பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறோம். மேலான பங்கை நாம் தெரிந்தெடுத்திருக்கிறோம்.

"ஆகையால் என் உதடுகள் உம்மைத் துதிக்கும்" "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்"(ரோமர் 10:10). கர்த்தரிடத்திலான நம் கீழ்ப்படிதலை நிரூபிப்பதற்கு, நீதியாய் நடப்பதே சிறந்த வழிகளில் ஒன்று என்று நாம் ஒருவேளைகூறக்கூடும், ஆனாலும் கர்த்தருக்கு பிரியமாய் ஜீவிக்க கடினமாக முயற்சிக்கிற சிலர், அவரை அறிக்கையிடுவதில் அவர்கள் தடைபண்ணப்பட்டிருக்க கூடும். அறிக்கையிடுவதன் மூலம் நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காரணங்கள் உள்ளன. இதில் உலகிற்கு சாட்சியளிப்பது ஒரு காரணமாகும் - இருளிலிருந்து வெளியே அழைத்தவரது புகழை வெளிப்படுத்துவது இரண்டாவது காரணமாகும். இந்த சாட்சியமானது நம்மீது நல்ல விளைவை ஏற்படுத்தும். இந்த சாட்சியத்துக்கு ஆதரவாக, நம் சுபாவ ஆற்றல்களை பட்டியலிடுகிறோம். இவ்வாறாக நம் சுபாவ ஆற்றல்கள் அனைத்தையும் பொருந்தப்பண்ண முடியும்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது எதிர்ப்பைக் கொண்டுவரும். நம் கர்த்தர் பிசாசுகளை

விரட்டியும், நோயுற்றோரை குணப்படுத்தியும் செய்திருந்து, தெய்வீகத் திட்டத்தைப் பற்றி எதுவும் பேசாதிருந்திருப்பாரானால், அவர் ஒரு சிறந்த குணாதிசயமுள்ளவராக, நன்மை மட்டும் செய்கிற மனிதராக தம்மை காண்பித்திருக்க சாத்தியமுண்டு. ஆனால் பரிசேயர் மற்றும் சதுசேயரிலிருந்து வேறுபாடாக அவர் போதித்ததால், சத்தியத்தை அவர் பிரசங்கித்தது, அவரை சுற்றிலும் உள்ளவர்களுடைய போதகங்களை மீறுவதாக எண்ணப்பட்டு, அவர்களுடைய கோபத்தை தூண்டியது.

இன்றையநாளிலும் அவ்வாறே நடக்கிறது. சத்தியத்தை அறியப்பண்ணும்போதே எல்லா உபத்திரவங்களும் வந்துசேருகின்றன. இதற்கு எந்தக் காலமும் விதிவிலக்கல்ல. இருண்டயுகப்பிரிவுகளிலும் சுவிசேஷ யுகம் முழுவதிலும் நற்காரியங்களை சத்தியமாய் பிரசங்கிப்போர் மீது, இருளின் அதிபதியினால் சிந்தைகள் குருடாக்கப்பட்டோரிடமிருந்து, உபத்திரவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கர்த்தரின் சுவிசேஷத்தைக் கூற நம் உதடுகளைத் திறக்குமளவுக்கு, சாத்தானால் குருடாக்கப்பட்டோரிடமிருந்து அவனது எதிர்ப்புக்குள்ளாவோம். உதடுகளால் ஒருவர் தேவனை தூஷிக்கமுடியும், அதே உதடுகளால் அவர் மனுஷரை காயப்படுத்தவும் முடியும். தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட இந்த வகுப்பாரின் உதடுகள், தற்கால ஜீவியத்தில் அவரது ஊழியத்துக்கென ஒப்புவிக்கப்பட்டுள்ளன. அவரது துதியை பறைசாற்ற அவை அர்ப்பணிக்கப்படவேண்டும். நம் தேவனின் பரிவிரக்கத்தையும், மகிமையான குணாதிசயத்தையும் எடுத்துக் காண்பிக்கவேண்டும். நம் கண்களுக்கு மகத்துவமாய்த் தோன்றுகிற தெய்வீகத் திட்டத்தின் அதிசயங்களை எடுத்துரைக்க வேண்டும்.

---

See more Books & Articles at  www.foodfornewcreature.com